**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 67/2020 |
| Name | : Chairman |
| P.W. | : 7 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**04.06.2026**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது வெள்ளகோவில் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 04.11.2019 அன்று கொமரலிங்கம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசன் பேரில் அங்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த ராமசாமி மகன் கண்ணன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப கொமரலிங்கம் காவல் நிலைய குற்ற எண். 250/2019 இதச பிரிவுகள் 294(பி), 324, 506(1) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து நீதிமன்றத்திற்கும் அதன் ஒரு நகலை மேல் விசாரணைக்கு காவல் உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) 04.11.2019 ம் தேதி மருத்துவமனையில் இருந்து இண்டிமேசன் கிடைத்து உதவி ஆய்வாளர் உத்திரவின் பேரில் நான் அங்கு சென்றேன். சம்பவம் எப்போது நடந்ததாக வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் 03.11.2019 ம் தேதி காலை 08.00 மணி. புகார் வாக்குமூலம் பதிவு செய்த போது உடன் யார் இருந்தார்கள் என்றால் சரியாக கவனிக்கவில்லை.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.04 18:26:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்